**ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய்... அற்புத மகசூல் கொடுக்கும் ஆட்டுக்கிடை!**

ஏக்கருக்கு 1,000 ரூபாய்.5 நாட்கள் கிடை போட்டால் போதும்.அதிக மகசூல். இயற்கை விவசாயம் என்றதுமே... 'பஞ்சகவ்யா, அமுதக்கரைசல், ஜீவாமிர்தம்... போன்ற இயற்கை இடுபொருட்களையெல்லாம் தயாரிக்க வேண்டும். அதையெல்லாம் தயாரிப்பதற்கு ஆட்களும் நேரமும் வேண்டும். அதெல்லாம் நம்மால் முடியாது' என்று மலைத்துப் போவதாலேயே... இயற்கை விவசாய ஆர்வம் உள்ளவர்கள் பலரும்கூட ரசாயன விவசாயத்தையே தொடர்கிறார்கள்.



ஆனால், "இயற்கை விவசாயத்துக்கு இப்படியெல்லாம் அலட்டிக் கொள்ளவே தேவையில்லை. வெறுமனே ஆட்டுக்கிடை மட்டுமே போதும்... வேறு இடுபொருட்களே தேவையில்லை" என்கிறார், கடலூர் மாவட்டம், புவனகிரி அருகில் உள்ள நல்லாம்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்த சிவகுமார். இவர், ஆண்டுதோறும் தன்னுடைய நிலத்தில் ஆட்டுக்கிடை மட்டுமே போட்டு, நெல் மற்றும் பச்சைப்பயறு சாகுபடியில் கலக்கி வருகிறார்.

**அன்று ஒப்பந்தக்காரர்... இன்று இயற்கை விவசாயி!**

"விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன்தான் நான். பத்து ஏக்கர் களிமண் பூமியிருக்கு. அப்பாதான் விவசாயத்தைப் பாத்துக்கிட்டிருந்தார். உயர் மின்னழுத்த டவர் அமைக்கற

கான்டிராக்ட்ரா நான் இருந்தேன். நல்லா வருமானம் வந்தாலும், பரபரப்பாவே இருக்க வேண்டியிருந்துச்சு. அதனால குடும்பத்தை, பிள்ளைகளை சரியா கவனிக்க முடியாம கஷ்டப்பட்டேன். அந்த சமயத்துலதான் (2003ம் ஆண்டு) இயற்கை விவசாயம் செய்ற 'பாலையூர்' பரணி, 'முருகமங்கலம்' ராமுவேல் எல்லாம் எனக்கு அறிமுகம் ஆனாங்க. அவங்ககிட்ட இயற்கை விவசாயத்தைப்பத்தி தெரிஞ்சிக்கிட்டேன்.

பிறகு, நம்மாழ்வார் அய்யாவை சந்திச்சப்ப... இயற்கை விவசாயம் பத்தி ரொம்பத் தெளிவா எடுத்துச் சொன்னார். உடனடியா கான்டிராக்ட் வேலையையெல்லாம் விட்டுட்டு விவசாயத்துக்கு வந்துட்டேன். அதுவரைக்கும் ரசாயன விவசாயந்தான் செஞ்சுக்கிட்டிருந்தார் அப்பா. நான், ரசாயனத்தைத் தொடவே கூடாதுங்கிற கொள்கையோட விவசாயத்தைக் கையில் எடுத்தேன்" என்ற சிவகுமார் தொடர்ந்தார்.

**கவலையைப் போக்கிய பஞ்சகவ்யா!**

"நான் ஊருக்கு வந்தப்போ... சம்பா பருவம். எங்க வயலைச் சுத்தி எல்லா வயல்லயும் நடவு வேலை செய்துகிட்டிருந்தாங்க. அதனால எங்க வயலுக்கு தொழுவுரத்தை எடுத்துட்டுப் போக முடியல. அடியுரம் எதுவுமே போடாமலே... ஒற்றை நாற்று முறையில நடவு செஞ்சேன். 'அடியுரமும் போடல... ரசாயன உரம் போடாம விட்டா... ஏக்கருக்கு அஞ்சி மூட்டை கூட தேறாது'னு பக்கத்து வயல்காரங்கள்லாம் சொன்னாங்க. நான் கவலையேபடல. ரெண்டு தடவை பஞ்சகவ்யா அடிச்சேன். ஒரு தடவை மூலிகைப் பூச்சிவிரட்டி அடிச்சேன். அறுவடையப்போ ஏக்கருக்கு 20 மூட்டை மகசூல் கிடைச்சது. அதுக்குப் பிறகு இயற்கை விவசாயத்துல முழு நம்பிக்கை வந்துச்டுச்சி.

**வேலையைக் குறைத்த ஆட்டுக்கிடை!**



சிவகுமார்

அடுத்த போகத்தப்போ முன்னாடியே ஏக்கருக்கு 10 டன்னுங்கிற கணக்குல தொழுவுரத்தை விலைக்கு வாங்கிட்டு வந்துட்டேன். ஆனா, அதுல கலந்து கிடந்த பாலிதீன் பை, உடைஞ்சு போன சீப்பு, பேஸ்ட் டியூபுனு ஏகப்பட்ட சாமான்களப் பிரிக்கறதுக்குள்ளப் போதும் போதும்னு ஆயிடுச்சு. 10 டன் தொழுவுரத்தை சுத்தப்படுத்துறதுக்கே ரெண்டாயிரம் ரூபா செலவாச்சு. அதில்லாம எங்க வயலைச் சுத்தி நிறைய வயல் இருக்கு. அதையெல்லாம் தாண்டி என் வயலுக்குத் தொழுவுரத்தை எடுத்துட்டுப் போறதும் சிரமமா இருந்துச்சி. அப்போதான் எனக்கு ஆட்டுக்கிடை போடலாம்கிற எண்ணமே வந்திச்சி.

**நோய்களும் தாக்குவதில்லை!**

அந்த வருஷத்தோட தொழுவுரத்தை நிறுத்திட்டு கிடைபோட ஆரம்பிச்சேன். ஆட்டோட சிறுநீரும் மண்ணுக்குக் கிடைக்கிறதால அதிக சத்து கிடைச்சுது. ஏற்கெனவே ரசாயன உரங்கள் பயன்படுத்தினதால இறுகிக் கிடந்த என்னோட நிலத்து மண்ணு.... வருஷா வருஷம் கிடை கட்ட ஆரம்பிச்ச பிறகு தரமா மாறிடுச்சி. பூச்சி, நோயும் வர்றதில்ல. புகையான் தாக்குதல்கூட இல்லனா பார்த்துக்கோங்க. வருஷா வருஷம் ஆனி மாசம் துவங்கினதும் கிடை போட ஆரம்பிச்சுடுவேன். அம்பது அறுபது நாளுக்குள்ள பத்து ஏக்கருக்கும் போட்டு முடிச்சிடுவேன்" என்று ஆட்டுக்கிடை புகழ் பாடிய சிவகுமார், கிடை போடும் முறை பற்றி வகுப்பு எடுக்க ஆரம்பித்துவிட்டார். அது-

**ஏக்கருக்கு 500 ஆடுகள்... 5 நாட்கள்!**

'ஒரு ஏக்கருக்கு 500 ஆடுகள் மூலம் ஐந்து நாட்களுக்குக் கிடை போட வேண்டும். ஒரு நாளைக்கு 20 சென்ட் நிலம் என்கிற கணக்கில் பட்டி கட்ட வேண்டும். கிடைபோட்ட ஐந்து நாட்களுக்குள்ளாகவே கருப்பாக மாறி, இறுக்கம் குறைந்து 'பொலபொல'வென ஆகி விடும் நிலத்தின் மண். இதனால் பயிருக்கு நல்ல காற்றோட்டமும் கிடைக்கும்.

**இரவில் எழுப்பினால், கூடுதல் சிறுநீர்!**

வழக்கமாக மாலை ஆறு மணியிலிருந்து காலை ஆறு மணி வரை கிடை போடுவார்கள். இரவில் ஆடுகளை இரண்டு முறை எழுப்பி விட்டால்... எழுந்தவுடன் சிறுநீர் கழிக்கும். அது அத்தனையும் நிலத்துக்கு சத்து. கிடை போட்டு முடிந்தவுடன் மழைக்கான அறிகுறி இருந்தால் மட்டும் ஏக்கருக்கு 10 முதல் 20 கிலோ வரை சணப்பு அல்லது தக்கைப்பூண்டு விதைகளைத் தூவிவிட வேண்டும். 45 நாட்கள் கழித்து அவற்றை மடக்கி உழுது, சேற்று உழவு செய்து, 20 நாட்களுக்குத் தொடர்ந்து தண்ணீர் கட்ட வேண்டும். தொடர்ந்து வழக்கமான முறையில் சாகுபடி செய்யலாம்.

**களைகளைக் கட்டுப்படுத்தும் அசோலா!**

ஆட்டுக்கிடை போடுவதால் களைகள் அதிகமாக மண்டும். அதனால், நாற்று நடவு செய்த மறுநாளே ஏக்கருக்கு இரண்டு கிலோ என்ற அளவில் அசோலாவை வயலில் தூவி விட்டால்... 50 நாளுக்குள் வயல் முழுதும் அசோலா பெருகிவிடும். இதுவே 50 சதவிகிதம் களைகளைக் கட்டுப்படுத்திவிடும். இதையும் தாண்டி வளரும் களைகளை மட்டும் அகற்றி, மண்ணில் போட்டு காலால் நன்கு மிதித்துவிட வேண்டும்.

**ஆட்டுக்கிடை போட்டு நடவு செய்யப்படுவதால், ஒரு நாற்றில் குறைந்தபட்சம்**

50 தூர்கள் வெடிக்கும். கதிர்கள் அனைத்தும் நீளமாகவும் வாளிப்பாகவும் இருக்கும். ஒரு கதிருக்கு 250 திரட்சியான நெல்மணிகள் வரை வரும். பதர்களும் குறையும்.'

**திரட்சியான நெல்மணிகள்!**

தொடர்ந்து பேசிய சிவகுமார், "ரசாயன உரம் போட்டு பக்கத்து வயல்கள்ல விளைஞ்ச நெல்லை 27 மரக்கா கொட்டினாதான் ஒரு மூட்டை (62 கிலோ) பிடிக்கும். ஆனா... என் வயல்ல விளைஞ்ச நெல்லை 24 மரக்கா கொட்டினாலே ஒரு மூட்டை நிரம்பிடும். அதேமாதிரி நெல் அறுவடை பண்றதுக்கு ஒரு வாரம் முன்னாடி ஏக்கருக்கு 4 கிலோ பச்சைப் பயறு விதையைத் தெளிச்சு விட்டுடுவேன். இதுக்கு தண்ணி மட்டும் விட்டா போதும். வேற எதுவும் செய்யத் தேவையில்ல.



அடுத்த 75-ம் நாள் அறுவடை பண்ணிடலாம். ஏக்கருக்கு 4 குவிண்டால் பயறு மகசூல் கிடைக்கும். பச்சைப்பயறு மூலமா 20 ஆயிரம் ரூபாய் வரைக்கும் கூடுதல் வருமானம். அறுவடை பண்ணினதுக்கு அப்பறம் நெல்லோட தாள், பச்சைப்பயறுச் செடி எல்லாத்தையும் அப்படியே மண்ணுலயே போட்டுடுவேன்.

**3,000 ரூபாய் மிச்சம்!**

ஆனி மாசம் பொறந்ததும் திரும்பவும் ஆட்டுக்கிடை போட்டுடுவேன். ஆறு வருசமா இதை மட்டும் செஞ்சே நல்ல லாபம் கிடைச்சிட்டு இருக்கு. ஒரு ஏக்கருக்கு கிடை போடுறதுக்கு 1,000 ரூபாய்தான் செலவாகுது. ஆனா... ரசாயன உரம் போட்டா 4,000 ரூபாய் செலவாகும். எனக்கு செலவு குறையுதுங்கறத விட, இயற்கை விவசாயத்துல விஷமில்லாத பயிரை உற்பத்தி பண்ற திருப்தி கிடைக்குது" என்றார் மகிழ்ச்சியாக.

**மவுசு குறைஞ்சு போச்சு...**



மழைமேகம்

சிவகுமாரின் நிலத்தில் தொடர்ந்து கிடைபோடுவது... 'கீதாரி' மழைமேகம். அதைப் பற்றி பேசிய மழைமேகம், "நான் 500 ஆடுகளை வெச்சு கிடை போட்டுக் கிட்டிருக்கேன். முன்னயெல்லாம் விவசாயிக எங்களத் தெய்வம் மாதிரி பார்ப்பாங்க. கிடை போடுறதுக்காக எங்களைத் தேடி அலைவாங்க. ஆனா, இப்போவெல்லாம் எல்லாரும் ரசாயன உரத்தைப் போட ஆரம்பிச்சுட்டாங்க. முப்பது வருஷத்துக்குள்ளதான் இந்த நிலைமை. இப்ப இருக்குற நிறைய விவசாயிகளுக்கு ஆட்டுக்கிடையோட அருமை தெரியுறது இல்லை. சிலர் மட்டும் வருஷம் தவறாம கிடை போட்டுக்கிட்டு இருக்காங்க. அவங்களால எங்க பொழைப்பு ஓடுது" என்று ஆதங்கம் பொங்கச் சொன்னார்.

**தொடர்புக்கு**

சிவகுமார், அலைபேசி : 94432-41115

**ஆதாரம் :** www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி, 25.8.11